வேண்டும் என்றும், பொதுமக்களுக்கு எல்லா சான்றிதழ்களும் அங்கு வழங்கப்படவேண்டும் என்றும் நான் பேசியிருந்தேன். அது அரசின் குறிப்பில் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவருடைய கோரிக்கை ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

வாய்க்கால்கள் சீரமைத்தல்

***28548—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, பெரமங்கலம் ஏரியின் வட, தென்புற பாசன வாய்க்கால்கள் சீரமைக்கப்பட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, பெரமங்கலம் ஏரியின் வட, தென்புற பாசன வாய்க்கால்களைச் சீரமைக்க NABARD வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2003 நவம்பர் 3]

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளி, தரணி ஆளும் தாரகையாய், ஏழைகளின் ஏந்தலாய், வெற்றியின் சிகரமாய், பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கும் வகையில் நல்லோர் அனைவராலும் போற்றப்படுகின்ற எங்கள் தாய், தெய்வத் தாய் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நீர் நிலை ஆதாரங்கள் செப்பனிடப்பட்டு வருகின்றன. இதனை மக்கள் பெரிதும் போற்றுகின்றார்கள். என்னுடைய முசிறி தொகுதியின் மிக முக்கியமான பெரமங்கலம் ஏரியின் பாசன வாய்க்கால்களைச் சீரமைக்கும் திட்டத்தினை இவ்வாண்டே நிறைவேற்ற அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரமங்கலம் ஏரியில் தூர் வாருதல், உபரி வாய்க்கால் மற்றும் வரத்து வாய்க்கால் பணிகள், ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுத் தந்த நிதி உதவியுடன் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. முதல் வட கால்வாய் 2.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூபாய் 9 இலட்சம் செலவில் 27 ஏக்டர் பயன் அளிக்கும் வகையில் செய்யப்பட்டுள்ளது; மதகு இரண்டின்கீழ் உள்ள தென் கால்வாய் 2.4 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இக்கால்வாயினைத் தூர் வாரி lining செய்ய ரூபாய் 7 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மற்றும் உள்ள மதகுகளைச் சீர்திருத்திட ரூபாய் 7 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு NABARD வங்கியின் உதவிக்கு அனுப்பும் நிலையில் உள்ளது. இப்பணியின் மொத்த மதிப்பீடு ரூபாய் 23 இலட்சம் ஆகும். NABARD வங்கியின் அனுமதி கிடைத்தவுடன் வரும் ஆண்டுகளில் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி மல்லிகா சின்னசாமி.

திருமதி மல்லிகா சின்னசாமி: அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. கோவை தங்கம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

3—

இளைஞர்களுக்கு வாய்ப்பு

*** 31589—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாக்காளர் சேர்த்தல், புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஏற்கெனவே பணிபுரிந்து வரும் ஆசிரியர், ஆசிரியைகளுக்குப் பதிலாக வேலை இல்லாத இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாக்காளர் சேர்ப்பது, புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஏற்கெனவே பணிபுரிந்து வரும் ஆசிரியர், ஆசிரியைகளுக்குப் பதிலாக வேலை இல்லாத இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க 1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவுகள் 13-பி மற்றும் 29-ன்படி விதிகளில் இடமில்லை.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாக்காளர் சேர்ப்பது, புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு ஆசிரியர், ஆசிரியைகளை இந்தப் பணியில் ஈடுபடச் செய்வதால் அவர்கள் தங்களுடைய குடும்பப் பணிகளை முடித்துவிட்டு பள்ளிக்குச் சென்று குழந்தைகளுக்குக் கல்வி கற்பித்து மீண்டும் வீட்டுக்கு வந்து தொடர்ந்து இந்தப் பணியைச் செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாட்டில் கடந்த 20, 25 ஆண்டு